
நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)



நலங்காக்கப் புறப்பட்ட நகரத்தார் குரலுக்குக்
குலங்காக்கும் முத்தையா கூடிவரும் கர்ப்பாமே

மே 1982

S. N. S.
PHARMACEUTICAL DISTRIBUTORS

13, NORTH VELI STREET,
MADURAI - 625 001.
Phone : 26474

Dear Sirs,

We are very glad to inform you that M/s. FULFORD (INDIA) PVT. LTD., BOMBAY affiliated with SCHERING CORPORATION, U. S. A., has appointed us as their Distributor at Madurai.

We express our sincere thanks to you for your valuable Patronage and Co-operation.

DISTRIBUTORS / STOCKIST / PREFERED / DEALERS FOR

E. Merck India Pvt. Ltd., Bombay
Allenburys (Glaxo) Bombay.
Standard Pharmaceuticals Ltd., Calcutta.
S. G. Chemicals & Pharmaceuticals Ltd.
(Suhrid Geigy Ltd.) Bombay.
Spencer & Co. Ltd., Madras.
The Fair Deal Corporation Pvt. Ltd., Bombay.
Tamilnadu Dadha Pharmaceuticals Ltd., Madras.
Astoria Pharmaceuticals, Madras.
Citadel Fine Laboratories, Madras.
P. S. K. Pharmaceuticals, Salem.
The Anglo-French Drug Co., Bombay.
Fourts India Laboratories Pvt. Ltd., Madras.
Nicholas Laboratories India Ltd.
(Indian Schering Ltd., Bombay)
Uniloids Ltd, Hyderabad.
Neroy Pharma Private Limited, Bombay.
Lupin Laboratories Pvt. Ltd., Bombay.
Concept Pharmaceuticals Pvt. Ltd., Bombay.
Bios, Bombay.
M[illegible] Laboratories, Bangalore
Pharmed Pvt. Ltd., Bombay.
F. O. R. Limit Rs. 1000/

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

குரல் 1

ஒலி 4

துந்துபி

சித்திரை

மே

1982

கௌரவ ஆசிரியர்:

லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:

வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:

சுப. அ. நடராசன் செட்டியார்

கட்டழ கானதோர் கற்பனை ராஜ்ஜியம்
கட்டி முடிந்ததடா-அதில்-கட்டில் அமைந்ததடா-கொடும்
சட்டங்கள் தர்மங்கள் ஏதுமில்லை இன்பச்
சக்கரம் சுற்றுதடா-அதில்நான்-சக்கரவர்த்தியடா.

— கவியரசு கண்ணதாசன்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625001.

தொலைபேசி ; p. p. 26668

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

புள்ளிகளின் சொத்து

சொ. சொ. மீ. சுந்தரம், எம். காம்.

பொங்குபுகழ் வேலிருக்கச் சக்தியொடு காட்சிதரும்
புள்ளிருக்கு வேளூரில் முத்தையா—எங்கள்
புள்ளிகளின் நெஞ்சிருக்கும் சொத்தையா

மங்கைஇரு பாலிருக்க வைத்தியர்க்கு நாதனெனும்
வள்ளலுக்குப் பிள்ளையென வந்தவன்—எங்கள்
வாரிசுக்கு நல்லபிள்ளை தந்தவன்.

தங்கமனச் செங்கருணை தையலுக்கு நாயகியின்
தங்கமடி மீதிருக்கும் சின்னவன் – ஒரு
தந்தமுள்ள யானையதன் பின்னவன்

கங்கையொடு காவிரியும் செங்குடத்தி லேயடைத்துக்
கந்தனுக்குக் காவடிகள் கட்டுவோம் – அந்தக்
காலனுக்குப் பாதையினைச் சுட்டுவோம்.

நகரத்தார் குரல்

அவசரமான அறப் பணி

நகரத்தார் சமூகத்தில் இளைஞர்கள் படும்பாடு தாளம் படுமோ தறிபடுமோ என்று பாடத்தக்க நிலையில் இருக்கிறது. படிக்கும் ஆர்வமுள்ளவர்களுக்கு முற்பட்ட வகுப்பு என்று கருதப்படும் இனத்தில் பிறந்ததால்,கல்வி வாய்ப்புக் கிட்டவில்லை படித்து முடித்த இளைஞர்களுக்கு அதற்கேற்ற வேலை வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. அரசாங்க வேலைகள் வங்கி வேலைகள் ஆகியவைகளில் பிற்பட்ட இனத்தாருக்கே சலுகைகள் உண்டு. நம்முடைய இளைஞர்களுக்கு வாய்ப்பில்லை. தனியாகத் தொழில் தொடங்கக் கூடிய பேராற்றல் வாய்ந்ததாக ஒரு காலத்தில் இருந்த இச்சமூகம் இன்று வேலை கேட்டும் பெற முடியாத நிலையில், சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிக்கிறது.

இந்நிலையில் நகரத்தார் சமூகத்துச் செல்வர்கள் தங்களுடைய நிறுவனங்களில் நகரத்தார் இளைஞர்களுக்கு வேலை கொடுக்க முனைந்து செயல்பட வேண்டும். இரண்டொருவர் முதலாளிகளிடம் தவறாகப் பேசிவிட்டாலும், தம் பிள்ளைகளாக நினைத்து முதலாளிகள் அவர்களைத் திருத்த வேண்டும். வேலை பார்க்கும் நகரத்தார் இளைஞர்களும் முதலாளிகள் முன்னேற்றம் தம் முன்னேற்றம் என்று கருதிப் பணிவோடு உழைக்க வேண்டும். முதலாளி தொழிலாளி என்று கூறாமல் முதலாளி கூட்டாளி என்று பெயர் வைத்தவர்கள் நகரத்தார்கள். இதற்கேற்ப நடந்து கொண்டால் பலருக்கு வேலை கிடைக்கும். இதுவே இப்பொழுது செய்ய வேண்டிய அவசரமான அறப் பணியாகும்.

கவியரசர் பிள்ளைத் தமிழ் - வருகைப் பருவம்

கவிஞர் இராகவன் முத்து

சீரோங்கும் கொப்புடையாள்
செழித்தோங்க உலகாளச்
செம்மாந்து தானமரும் மாண்புச்
சிங்கமெனும் ஒருகொடியால்
தங்கமனம் போல் உலகைத்
தினம்வென்று வாழுமுறை கண்டே

பாரோங்கும் நகரத்தார்
பண்போங்க வாழ்பதிக்குள்
பரிவோங்கு மலையரசி யன்னை
பார்த்தோங்க வாழ்த் திடலால்
சேர்த்தோங்கு புகழ்கண்ட
பரிசோங்கு சிறுகூடற் பட்டி

நீரோங்கும் செய்தோன்றி
நிலமோங்கத் தமிழ்ச்சோறை
நிதம்வழங்க வந்தமுத்து நெல்லே!
நெய்யோங்கு பண்ணியமாய்
நீ சொல்லும் கவிகேட்க
நினைத்தவுடன் ஊறும் நாவே!

ஏரோங்கும் தமிழ்த்தாயோ
இவன்மீண்டும் தாயாக,
இவன்மகளாய்ப் பிறந்திடுவேன் என்று
இருந்தோங்கும் தவஞ்செய்தாள்!
எழுந்தவளைத் தாலாட்டும்
இன்கவிகள் பாட வாவே!

கவியரசரின் புதல்வர்களுடன் சில நிமிடங்கள்

மதுரையில் அண்மையில் நடைபெற்ற 'உலக மகா கவிஞன்' கவியரசு கண்ணதாசனின் நினைவு விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த, அவரது புதல்வர்களான திரு. கண்மணி சுப்பு திரு. கலைவாணன் ஆகிய இருவரையும் சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் ஆசைப்படுகிறேன்.

கண்மணி சுப்பு

திரு. கண்மணி சுப்பு மிகச் சாதாரணமானவராக, அமைதியான தோற்றத்துடன் காட்சியளிக்கிருர். இவருக்கு வயது 29. இவர் நெற்குப்பை மாப்பிள்ளை. 'புலிக்குப் பிறந்தது பூனை ஆகாது' என்பது சொல்மொழி. அந்த சொல்மொழிக் கேற்ப இவர் தந்தையின் வழியில்



திரு. கண்மணி சுப்பு திரு. கலைவாணன்

கவிதைகள் இயற்றுகிருர். இவரது பாடல்கள் சில ''நினைத்தாலே இனிக்கும்'' தமிழ்ப் படத்தில் இடம் பெற்றுள்ளன. 'கண்ணதாசன்' 'கல்லூரிக் கனி' ஆகிய இதழ்களில் இவரது சில கவிதைகள் வெளி வந்துள்ளன. இவர் ''தப்புத்தாளங்கள்'', ''நூல்வேலி'' ''அன்புள்ள அத்தான்'' ஆகிய சில தமிழ்ப் படங்களில் சின்னஞ்சிறு வேடங்களில் நடித்துள்ளார்.

சினிமா டைரக்டர் கே. பாலச்சந்தரிடம் 1975 முதல் 1980 வரை உதவி டைரக்டராகப் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டு, இவரது தம்பி கதாநாயகனுக நடிக்க, இவர் ''அன்புள்ள அத்தான்'' படத்தை டைரக்ட் செய்திருக்கிருர்.

தேன் சிட்டுக்கள். ராஜ்யம் இல்லாத ராஜாக்கள் ஆகிய இரு படங்களுக்கு வசனம், பாடல்களை எழுதுவதாகவும் முற்றிலும் புதுமுகங்கள் பங்கேற்கவிருக்கும் ''மேனி சிலிர்க்குதடி'' படத்திற்கு கதை, வசனம் டைரக்ஷன் பொறுப்பேற்கப் போவதாகவும் இவர் கூறினர்.

''உங்கள் தந்தை இயற்றிய திரைப்படப் பாடல்களில், உரை நடை நூல்களில் உங்களுக்குப் பிடித்தவை எவை?'' என்று கேட்ட போது ..

''அவர் இயற்றிய பாடல்களில் 'சோதனை மேல் சோதனை' (தங்கப் பதக்கம்), 'நதியில் விளையாடி' (பாசமலர்), 'மான் கண்ட சொர்க்கங்கள்' (47 நாட்கள்) போன்ற பல பாடல்கள் எனக்குப் பிடிக்கும். அவர் எழுதிய ''புஷ்பமாலிகா'' நூல் எனக்கு மிகவும் பிடித்தமானது. அதை நான் 6, 7 முறை படித்திருக்கிறேன்'' என்ருர்.

தன் தந்தை எழுதிய கவிதைகள் 6 தொகுதிகளாக வெளிவந்திருப்பதாகவும் 7 ஆவது தொகுதி வெளிவரப் போவதாகவும் 'தமிழ் நாட்டில் ஒரு செட்டிநாடு' என்ற நூலுக்கான குறிப்புக்கள் அப்படியே இருப்பதாகவும் அதை நூல் வடிவில் வெளிக்கொணர ஏற்பாடுகள் செய்யவேண்டியதிருக்கிறது என்றும் திரு. கண்மணி சுப்பு கூறினர்.

கலைவாணன்

திரு. கலைவாணன் 22 வயது இளைஞர். இவருக்கு இன்னும் திருமணமாகவில்லை. ஒரு சினிமாக் கதாநாயகனுக்கு வேண்டிய அத்தனை அம்சங்களும் அமையப் பெற்று வசீகரமாகக் காட்சியளிக்கிருர் இவர்.

இவர் சினிமா டைரக்டர் எஸ்பி. முத்துராமனிடம் ''புவனு ஒரு கேள்விக்குறி''யிலிருந்து 15 படங்களுக்கு உதவி டைரக்டராகப் பணியாற்றியிருக்கிருர். அதையடுத்து டைரக்டர் ஜி. என். ரங்கராஜனிடம் ''கல்யாண ராம''னிலிருந்து 5 படங்களுக்கு உதவி டைரக்டராகப் பணியாற்றியிருக்கிருர்.

இன்னும் பெயர் வைக்காத இரண்டு படங்களில் தான் நடித்து வருவதாகவும் தனக்கு நடிப்புத் துறையைக் காட்டிலும் டைரக்ஷன் துறைதான் மிகவும் பிடித்திருப்பதாகவும் இவர் கூறினர். அடுத்த மாதம் ஒரு புதிய படத்தின் டைரக்ஷனைக் கவனிக்கப் போவதாகவும், தன் தந்தையைப் போல் தானும் தன் அண்ணனும் புகழ் பெற முடியும் என்பது சந்தேகமே என்றும் கூறினர்.

கவியரசரின் புதல்வர்கள் தங்கள் பாதைகளில் வெற்றிநடைபோட உளமார வாழ்த்துவோம்.

பேட்டி: எல். சுந்தரம்

நெஞ்சில் பாயும் நினைவலைகள்

வி. என். சிதம்பரம் செட்டியார்

(25-8-81ல் சிக்காகோவிலிருந்து எழுதியது)

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு சென்னையில் கவிஞர் கண்ண தாசனை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்த மறுதினம் சென்று பார்த்தேன். கவிஞரும் "எனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை. சளி மட்டும் இருக்கிறது. முதல்வரின் கட்டாயத்தின் பேரில் இங்கு வந்து இருந்து வருகிறேன்" என்று சொன்னார். அதன் பிறகு சிறிது நாட்களில் அமெரிக்கா செல்கின்ற செய்தியினை பத்திரிகைகள் வாயிலாக அறிந்தேன். அமெரிக்கா வந்ததும் டெட்ராயிட் நகரில் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டு பேசியிருக்கிறார். அரசவைக் கவிஞர் ஆன போது தமிழக அரசு அணிவித்த டாலரை மறக்காமல் எடுத்து வந்து காண்பித்து, தமிழக அரசை, தமிழக முதல்வரை நெஞ்சாரப் பாராட்டியிருக்கிறார். மாநாடு முடிந்த பிறகு சளி அதிகமிருந்திருக்கிறது. உடன் வந்த துணையாளர் திரு. அரசு நாச்சியப்பன் கவிஞரின் முதுகில் சிறிது தட்டவும் சளி அதிகம் கொட்டியிருக்கிறது. இருமலும் இருந்ததால் தொடர்ந்து அதிகம் பேச முடியவில்லை. இந்த நிலையில் சிக்காகோ வந்து Dr. ஆறுமுகம் வீட்டில் தங்கியிருக்கிறார். டி.பி.யாக இருக்குமா அல்லது ஈரல் கோளாறு என்று ஆராய சிகாகோ ஹோலி கிராஸ் மருத்துவ மனையில் சேர்த்துப் பரிசோதனை செய்திருக்கிறார்கள். அது சமயம் எதிர்பாராமல் இரு முறை ஹார்ட் அட்டாக் வந்து விட்டது. பிரபல அமெரிக்க சர்ஜன் ஆந்திராவைச் சேர்ந்த Dr. ஹரிராவ் தலைமையில் Dr. ஆறுமுகம், மற்றும் அமெரிக்க டாக்டர்கள் மொத்தம் 9 பேர் கவனிக்கலானார்கள். ஹோலி கிராஸ் மருத்துவ மனையில் நவீன கருவிகள் அனைத்தும் இருக்கின்றன. கவிஞர் இருக்கும் அறை நர்ஸ் இருக்கும் இடம் எல்லாவற்றிலும் *T.V.* ஸ்கிரீன் மூலம் நிலைமை தெரியும். 24 மணி நேரமும் டாக்டர்கள், நர்ஸ்கள், ஷிப்டு முறையில் பணி புரிகின்றனர். ஹார்ட் அட்டாக் வந்தாலோ, நாடித் துடிப்பில், பிளட் பிரஷரில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டாலோ மிஷின் மூலம் அலாரம் கேட்கும். உடனே டாக்டர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கமுடியும். போலீஸ் செக்யூரிட்டி மப்டியிலும், உடையுடனும் இருக்கிறார்கள். டாக்டர்கள், நர்சுகள் மிகச் சிறப்பான முறையில் கவனித்துக்கொள்கின்றனர். ஆக்சிஜன் தொடர்ந்து கொடுக்கிறார்கள். மூச்சு விடுவது, மிஷின் மூலம் தான். உணவு, நரம்பு மூலம் தான். சளி அதிகமிருந்தாலும், பல கருவிகள் இயங்குவதாலும், தொண்டையில் சிறிய ஓட்டை போட்டு, ஒரு குழாய் வைத்து, சளி நிறைந்ததும், சிரிஞ்ச் மூலம் எடுத்து விடுகிறார்கள். இந்த நிலையில், மூளை பாதித்திருக்கலாமோ என மருத்துவர்களுக்கு, ஒருசந்தேகம். இனிப்புநீர், ரத்தக் கொதிப்பு இருந்ததால், அந்தச் சிக்கல் வேறு. சில நேரங்களில், காய்ச்சலும் வருகிறது. விக்கல் எடுக்கிறது. பிறகு படிப்படியாக நினைவு

திரும்பியது. டி. பி. இல்லை என்று ரிசல்ட் வந்தது. மூளையில் பாதிப்பு இல்லை என்றும் முடிவு செய்தனர். ஆனால் ஒரு நுரையீரல் முழுதுமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆபரேஷன் செய்து எடுக்க வேண்டும். அதற்கு 3 மாதமாவது ஆக வேண்டும். இந்தியாவிற்குச் செல்வ தென்றாலும், விமானம் அதிகமான உயரத்தில் பறக்கும்போது, ஆக்சி ஜன் குறைவாக இருக்கும். ஆகவே உடம்பு குணமானவுடன், நவீன கருவிகள் உள்ள இங்கு இருந்து, ஆபரேஷனைத் திருப்திகரமாக முடித்துக்கொண்டு புறப்பட வேண்டும்.

தமிழக முதல்வர், பல முறை, தொலை பேசியில் *Dr.* ஆறுமுகம் துணையாளர் நாச்சியப்பனுடன் பேசியிருக்கிறார். அமெரிக்க சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த கல்விஅமைச்சருடன் முதல்வர் தொடர்பு கொண்டு தகவல் கொடுத்ததன் பேரில், கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்களும், செயலாளர் திரு. ராம்தாசும், நியூயார்க் கிலிருந்து, 28-7-81வ மாலை சிகாகோ வந்து, கவிஞரைப் பார்த்து விட்டு, பிறகு டாக்டர்களுடன் ஒரு மணி நேரம் கலந்து ஆலோசித்து விட்டுச் சென்றனர். அமைச்சருடன், சிகாகோவிலிருந்த, இந்திய தூதராலயத்தைச் சேர்ந்த, பெரிய அதிகாரியும் வந்திருந்தார். நானும் அது சமயம் மருத்துவமனையிலிருந்தேன். கலைஞர் கருணாநிதி அவர்களும், துணையாளர் நாச்சியப்பனுடன், தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார். கவிஞருக்கு, எப்படிக் கட்சி பேதமில்லையோ, அது போல் மத பேத மில்லாமைக்கு உதாரணமாக சுவற்றில் அன்னை மேரி மாதா படம் இருக்கிறது. கவிஞரின் இல்லத் திலிருந்து, நான் வரும் போது அனுப்பிய காஞ்சிப் பெரியவரின், படமும் இருக்கிறது. கவிஞர் உடல் நலம் பெற, பூஜையில் வைத்து நான் கொண்டு வந்த, அன்னை மீனாட்சியின் குங்குமம், கவிஞர் நெற் றியிலும், அன்னை மீனாட்சியின் டாலர், மேஜையிலும் இருக்கிறது. நான் இங்கு வரும்போது அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு *Rm. V.* அவர்கள், உடனுக்குடன் கவிஞரின் உடல் நலம் குறித்துச் செய்தி அனுப்பச் சொன்னார்கள். தொலைபேசியிலும் பேசினார்கள். கவிஞரின் மனைவி, மகன் கலைவாணன், துணையாளர் நாச்சியப்பன் *Dr.* ஆறுமுகம் முதலியவர்கள் சோகமே உருவாக, கவிஞரை கவனித்து வருகிறார்கள். தமிழ் தெரிந்த மக்கள் அனைவரும், கவிஞரைப் பார்த்த வண்ணம் இருக்கின்றனர். மருத்துவ மனைச் சிலவு, முன்பு ஒரு நாளைக்கு சுமார் நாலாயிரம் அமெரிக்க டாலரும், இப்பொழுது ஒரு நாளைக்கு, இரண்டாயிரத்து ஐநூறும் வரலாம்.

கவிஞரின் வியர்வை படர்ந்த முகத்தை, அவரது மனைவியார் துடைத்து, ஒரு குழந்தையைக் கவனிப்பது போல், கவனித்ததைப் பார்த்தபோது 'தாய்க்குப் பின் தாரம்' என்ற வார்த்தைக்கு



ஹோலி கிராஸ் மருத்துவ மனையில் படுக்கையில் இருக்கும் கவியரசு கண்ணதாசனை திரு. வி. என். சிதம்பரம் செட்டியாரும் அவரது துணைவியாரும் நலம் விசாரிக்கின்றனர். படத்தில் கண்ணதாசனின் துணைவியார் திருமதி பார்வதியும் இருக்கிறார்.

அர்த்தம் புரிந்தது. கவிஞருக்கு நினைவு திரும்பியதிலிருந்து வேண்டியவர்களைக் கண்டால் கண் கலங்குகிறார். என்னைப் பார்த்ததும் பேச முயற்சித்தார். தொண்டையில் டியூப் இருப்பதால் பேச முடியவில்லை. நாங்கள் கவிஞரே பேசுங்கள் என்கிறோம். யாரைப் பார்த்து? கோடிக் கணக்கான மக்களை, தன்னுடைய தமிழால், கவிதைகளால், கட்டிவைத்த கவி அரசன் பேசாமல் எங்களைப் பார்க்க, அவர் பேச்சை மட்டுமே கேட்டுப் பழக்கப்பட்ட நாங்கள் பேசுகிறோம். பேசச்சொல்லு கிறோம். என்ன கொடுமை! கவிஞரின் ஒரு சொல்லுக்கு எத்தனை கருத்து, அர்த்தங்கள் இருக்கும்? எங்கள் கவிஞர் நாவில் குடியிருந்த சரஸ்வதியே, கவிஞரின் நாவை, வாடகை வீடாக எண்ணி விடாமல், சொந்த வீடாக நினைத்து, நிரந்தரமாகக் குடியிருக்க உன்தாள் பணிகிறோம். அருணகிரி நாதர், திருவண்ணமலை கோபுரத்தில் ஏறிஉயிரை மாய்த்துக் கொள்ள எத்தனித்த போது, காப்பாற்றி, ''பாடு'' என்று சொல்ல ''எதைப் பாடுவேன். உன் திருப்புகழைப் பாடவா?'' என்று கேட்டு உன்னைப் பாட வைத்த முருகா அதே வாழ்க்கை வாழ்ந்து, பக்தியில் திளைக்கிற எங்கள் கவிஞரைக் காப்பாற்ற மாட்டாயா? உலகத் தமிழ் மாநாட்டில், மீனுக்ஷி அம்மன் கோவிலுக்குவந்து, தலையாய தமிழுக்கு நிலையாய மகுடம் போல் மேடையை அலங்கரித்து, சங்கம்

வைத்து தமிழ் வளர்த்த மாமதுரையில் சிங்கம் போல் நீ வீற்றிருக்க, ஆடிவீதியில் மக்கள் வெள்ளம், உன் கவிதை மழையில் நனைந்து, கட்டுண்டு இருந்த போது, நீ, அங்கயற்கண்ணி சன்னதிக்கு வந்து, அவள் அழகைக் கண்டு பரவசப்பட்டு அம்மனின் மூக்குத்தியைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதினாயே? போதுமா எங்களுக்கு! அம்மா மீனாட்சி! பிள்ளைத்தமிழ் போல் உன்பிள்ளை பாடவாவது காப்பாற்றமாட்டாயா? மலையத்துவசன் பெற்றெடுத்த பெரு வாழ்வே! உன் தாமரைப் பாதந் தொட்டு வணங்குகிறேன். காப்பாற்று எங்கள் கவிஞனை! செட்டி மகனல்லவா! நாத்திகம் பேசியதற்கு, முதலாக அர்த்தமுள்ள இந்து மதம்; வட்டியாக பைபிளுக்கு உரை எழுதியவன் எங்கள் கவிஞன். உருவம் மாறலாம். தெய்வம் ஒன்று. எல்லா உருவங்களையும் வணங்குகிறோம். எங்கள் கவிஞனைக் காப்பாற்றட்டும்.

கவிஞர் மூன்று குழந்தைகள் இருப்பது தனக்குப் பிடிக்காதென்பார். 'அந்த மூன்றும் மண்டாக இருக்கலாம்; பத்துக் குழந்தைகள் இருந்தால் அதில் இரண்டாவது அறிவாளியாக இருக்கும்' என்பார்.

— எஸ். எஸ். தென்னரசு
(கவிஞர் கண்ணதாசனின் நினைவு விழாவில்)

பழகித் திரிந்த பறவைகள்

கு. வெ. கு. வெங்கிட்டாசலம் செட்டியார்
ஒ. சிறுவயல்

நானும் 'கவியரசு' கண்ணதாசன் அவர்களும் ஐந்தாண்டுக் காலம் அமராவதி புதூர் சுப்பிரமணியன் செட்டியார் குருகுலத்தில் ஒன்ருகப் படித்தோம். அப்போது அவர்கள் தோற்றத்தால் டாக்டர் தமிழண்ணலைப் போல இருந்தார்கள். எங்களுக்குத் தலைமை ஆசிரியராக 'பன்மொழிப் புலவர்' கா. அப்பாத்துரை அவர்களும் மானேஜராக நடருஜ நாயஞர் அவர்களும் இருந்தார்கள்.

கண்ணதாசன் அவர்கள் கல்வி பயிலும் காலத்தில் பாரதியார் பாடல்களை விரும்பிப் படித்துக் கொண்டேயிருப்பார்கள் — இல்லை — முணுமுணுத்துக் கொண்டேயிருப்பார்கள். அவர்களுக்குப் பாரதியார் பாடல்களில் கிளிக் கண்ணிதான் மிகவும் பிடிக்கும்.

''நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி — கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி''

இப்பாடலைக் கண்ணதாசன் அவர்கள் ''நெஞ்சில் உரமுமின்றி கிளியே நேர்மைத் திறமுமின்றி கிளியே வஞ்சனை சொல்வாரடி கிளியே வாய்ச் சொல்லில் கிளியே வீரரடி கிளியே'' என்று பாடுவார்கள். பாரதியாரின் பாடலில் இரண்டு கிளிகள் இருந்தால் கண்ணதாசன் அவர்கள் முணுமுணுக்கும்போது அதிகமாகக் 'கிளி'யைப் பயன்படுத்துவார்கள். ''ஏனப்பா இப்படிக் கிளியைப் போட்டுப் பாடாய்ப் படுத்துகிருய்?'' என்று கேட்டால் ''மனிதனுக்குச் சொன்னல் மட்டுப் படாது என்று கிளிக்குச் சொல்லி விளங்க வைத்திருக்கிருர் பாரதியார்'' என்று வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டே சொல்லுவார்கள். அப்போதே சின்னச் சின்ன 'விட்டுக்' கவிதைகளைச் சொல்லிச் சிரிக்க வைப்பார்கள்.

கண்ணதாசன் அவர்களுக்கு அப்போது 'முத்தையா' என்று பெயர். நாங்கள் அவரை 'முத்து' என்றுதான் அழைப்போம். அவர்கள் ஆருவது படித்துக் கொண்டிருந்தபோது ஒரு அப்பாவி மாணவனை அழைத்து ''சுப்பிரமணியனுக்கு எத்தனை மனைவிகள்?'' என்று கேட்க, அவன் ''இரண்டு'' என்று சொல்ல, ''பெருமாளுக்கு எத்தனை?'' என்று கேட்க, ''இரண்டு'' என்று சொல்ல, ''சிவபெருமானுக்கு எத்தனை?'' என்று கேட்க, ''ஒன்று'' என்று அவன் பதில் சொன்னன். அதற்கு அவர்கள் ''போடா முட்டாளே! அவர் தலையில் ஒரு மனைவியை வைத்திருக்கிருர்'' என்று விளக்கிஞர்கள். பிறகு

''எனக்கு எத்தனை மனைவிகள்?'' என்று கேட்க, அந்த மாணவன் ''தெரியாது'' என்று சொல்ல ''அட உனக்குத் தெரியாதா? எனக்கு இரண்டு மனைவிகள்'' என்று கூறி தனது மனைவிமார்கள் வீட்டில் இருப்பதாகவும் சொன்னார்கள்.

மீண்டும் அந்த அப்பாவி மாணவனை நோக்கி கண்ணதாசன் அவர்கள் ''உனக்கு எத்தனை மனைவிகள்?'' என்று கேட்க, அவன் தனக்கு ஒன்றுகூட இல்லை என்று பதில்கூற, ''போடா முட்டாள்; நாங்கள் எல்லாம் மானேஜரிடம் கேட்டு வாங்கிக்கொண்டோம். அது போல் நீயும் கேட்டு வாங்கிக் கொள்'' என்று கூற, அதுபோல் அந்த மாணவன் மானேஜரிடம் சென்று மனைவிகளுக்காக முறையிட்டு வாங்கிக் கட்டிக்கொண்டதையும் ''மனைவிகள் 'ஸ்டாக்' இல்லாத நேரத்தில் நீ கேட்டதால் உனக்குக் கிடைக்கவில்லை; ஸ்டாக் இருக்கும் சமயம் நானே பார்த்துக்கேட்டு வாங்கித் தருகிறேன்''என்று அவர்கள் ஆறுதல் கூறியதையும் இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

பின்பு ஒரு சமயம் அந்த அப்பாவி மாணவன் பள்ளியில் இருந்த தேன்கூடு ஒன்றைச் சேதப்படுத்திவிட்டான். அந்தத் தவறை, தான் செய்ததாகக் கூறி கண்ணதாசன் அவர்கள் ஒப்புக்கொண்டு அதற் குரிய தண்டனையையும் மானேஜரிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள்.

அதன்பின்பு நான்காண்டுகளுக்குப் பிறகு கவிஞர் அவர்களை காரைக்குடி முத்துப்பட்டணத்தில் நான் சந்தித்தபோது தான் சிகரெட் புகைப்பதைப் பலர் கண்டிப்பதாகவும் படிக்கிற காலத்தில் தான் நாள் ஒன்றுக்கு ஒரு சிகரெட் குடித்ததாகவும் தற்போது இரண்டு 'பக்கெட்' டுகள் குடிப்பதாகவும் ''இது ஒரு குற்றமா?'' என்றும் கேட்டார்கள். ''பங்காளிகள் வீட்டுக்கு வந்தால் சாப்பிட்டுவிட்டுப் போகாமல் இதை யெல்லாம் கட்டுப்படுத்தலாமா'' என்று கூறினார்.

நெஞ்சில் ஒன்றும் வாயில் ஒன்றும் பேசத் தெரியாத குழந்தை மனம் கொண்டவர் கவிஞர். நான் காரைக்குடியில் இருந்து ஒ. சிறுவயலுக்குப் பிள்ளை வளரப் போனேன். அவர் சிறுகூடல்பட்டி யிலிருந்து காரைக்குடிக்கு வந்தார். இடத்தால் பிரிந்தாலும் இதயத் தால் நான் அவரை இதுவரை பிரியவில்லை. அவர்தான் என்னை விட்டுப் பிரிந்து போய்விட்டார் ...

> தான் உயிருடன் இருக்கும்போது ஒரு இரங்கற் பா எழுதி வைத்தவர் கம்பனுமல்ல; வள்ளுவனு மல்ல; நம் கண்ணதாசன் தான்.
>
> — தா. பாண்டியன்

கவிஞர் கண்ணதாசன் நினைவு விழாவில் அமைச்சர், அறிஞர் பெருமக்கள் புகழஞ்சலி

உலகப் புகழ் பெற்ற மகா கவிஞன் 'கவியரசு' கண்ணதாசனின் நினைவு விழா 18-4-82 ஞாயிறன்று மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் நிகழ்ந்தது.

காலை நிகழ்ச்சி 10 மணிக்குத் தொடங்கியது. நினைவு விழா அமைப்பாளர்களில் ஒருவரான திரு. எஸ் வி. இராமநாதன் வரவேற்றார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் விழாவிற்குத் தலைமையேற்றார்.

இராம. முத்தையா

பாங்க் ஆப் மதுரையின் தலைவர் திரு. இராம. முத்தையா தொடக்கவுரை நிகழ்த்தினார். அப்போது அவர் தானும் கவிஞரும் இளமை நாட்களில் பூப்பந்து ஆடியதை நினைவு கூர்ந்தார். கவிஞர் சிறுவயதிலிருந்தே கொள்கைப் பிடிப்புள்ளவர் என்றும் நண்பர்களை மறக்கமாட்டார் என்றும் கண்ணன் காட்டிய வழியைக் கடைப்பிடித்தார் என்றும் கூறினார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசுகையில் இலக்கியச் சிந்தனையை சாதாரண மக்களிடத்திலே புகுத்துவது பெரிய காரியம் என்றும் அதில் கண்ணதாசன் வெற்றி பெற்றார் என்றும் கண்ணதாசனைத் திரும்ப அழைத்துக் கொண்ட துயரத்தை 20ஆம் நூற்றாண்டு நமக்குத் தந்திருக்கிறது என்றும் 'உளதாகும் சாக்காடு' என்பது அவருக்கு முற்றிலும் பொருந்தும் என்றும் கூறினார்.

எஸ். எஸ். தென்னரசு

தி. மு. க.வைச் சேர்ந்த திரு. எஸ்எ.ஸ். தென்னரசு பேசுகையில் தான் அதிக நாட்கள் கவிஞரிடம் பணியாற்றியதாகவும் தனது பேச்சு, எழுத்து யாவும் அவரது பாணியாகவே இருப்பதாகவும் அதிலிருந்து தன்னால் விலகிச்செல்லமுடியவில்லை என்றும் கூறினார். அண்ணாவைப் போல் புகழ்பெற்ற அவரது பூத உடலை காரைக்குடிக்குக் கொண்டு வராதது தனக்கு மனக்குறையாக இருப்பதாகவும் கூறினார்.

எஸ். முத்து

மதுரை மாநகராட்சியின் முன்னாள் மேயர் திரு. எஸ். முத்து பேசுகையில் திராவிடர் கழகம் - அது தி.மு.க. வானாலும் சரி அ.தி.மு.க. வானாலும் சரி அரசு பொறுப்பேற்கத் தியாகம் செய்தவர்களில் கண்ணதாசன் மிக முக்கியமானவர் என்றும் கல்லக்குடி போராட்டத்தில் அவர் அடிபட்டார் என்றும் இலங்கையில் தமிழர்களுக்கு ஆபத்து வந்த போது கண்ணதாசன் கொதித்தெழுந்தார் என்றும் கூறினார். தமிழக

முதல்வர் எம். ஜி. ஆரை எவ்வளவோ தாக்கி எழுதியிருந்தும் எம். ஜி. ஆர். பெருந்தன்மையோடு கவிஞரை அரசுக் கவிஞனாக்கினார் என்றும் கூறினார்.

வி. பி. ராமன்

ஆடிட்டர் திரு. வி. பி. ராமன் பேசியபோது கவிஞர் தன் எளிமை யான பாடல்களால் மக்களின் மனம் கவர்ந்தார் என்றும் அவர் நல்ல இனிய நண்பர் என்றும் கூறினார்.

டாக்டர் சண்முகம் செட்டியார்

டாக்டர் எஸ். சண்முகம் செட்டியார் பேசுகையில் விளங்காத தத்துவத்தையும் எளிமையாக பலருக்கும் புரியும்படி எழுதுபவர் கண்ணதாசன் என்றார்.

மாணிக்கம் முத்தையா

திரு. மாணிக்கம் முத்தையா பேசுகையில் பக்தி, காதல், மார்க்ஸீ யம் எதுவானாலும் கண்ணதாசனுக்கு நிகராக யாரும் எழுத முடியா தென்று பேசினார். புத்தகங்களுக்கு அறிவு கொடுத்தவர் கவியரசு என்றும் கூறினார்.

வி. என். சிதம்பரம் செட்டியார்

''நகரத்தார் குர''லின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் பேசுகையில் தனக்கும் கவிஞருக்கும் ஏற்பட்ட நட்பு பற்றி விளக்கினார். கம்பனுக்கு மேலாக மதிக்கப்படுபவர் கவியரசர் என்றும் தன்னுடைய சுய சரிதையில் நிறைகளோடு குறைகளையும் கவிஞர் எழுதியிருக்கிறார் என்றும் கூறினார்.

ப. சிதம்பரம்

திரு. ப. சிதம்பரம் பேசுகையில் தேசம், தேசியம், தேசத்தலைவர் கள், தேசப் பெருநோக்கு ஆகியவை கவிஞர் விட்டுச்சென்ற சொத்துக் கள் என்று கூறினார்.

அமைச்சர் காளிமுத்து

தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் கே. காளிமுத்து பேசுகையில் கவிஞர் சுயசரிதம் எழுதியதோடு சுய விமர்சனமும் செய்தவர் என்றார். அவர் ஒரு பூங்குயில் என்றும் தன் பேச்சால், எழுத்தால், பொருள் பொதிந்த, இலக்கியச் சுவை மிகுந்த பாடல்களால் சிறந்து விளங்கினார் என்றும் கூறினார்.

ப. நெடுமாறன்

திரு. ப. நெடுமாறன் பேசுகையில் கண்ணதாசனுக்குச் சமய வேறுபாட்டு உணர்வு எந்தச் சமயத்திலும் அணு அளவுகூட இருந்த தில்லை யென்றும் சம உரிமையோடு பழகக் கூடிய அவர் தவறைச் சுட்டிக் காட்டினால் திருத்திக் கொள்ளக்கூடிய பண்பாளர் என்றும் கூறினார்.

தா. பாண்டியன்

திரு. தா. பாண்டியன் பேசுகையில் தமிழகத்தில் கவியரசரின் வசை மொழிகளில் தப்பியவர்கள் யாரும் இல்லையென்றும் கண்ணதாசனைக் காலம் ஒருநாள் மறந்து விடும்; ஆனால் அவர் படைத்த கவிதைகள் அந்தக் காலத்தையே வென்றிடும் என்றும் கூறினார்.

மனோரமா

நடிகை மனோரமா பேசுகையில் கவிஞர் கண்ணதாசன் 1958ல் தன்னை ''மாலையிட்ட மங்கை'' மூலம் அறிமுகப்படுத்தினார் என்றும் தனது பெருமைகள் எல்லாம் அவருக்குத்தான் என்றும் கூறினார்.

கவியரங்கம்

மாலை நிகழ்ச்சி இரவு 7 மணிக்குத் தொடங்கியது. டாக்டர் அர. சிங்கார வடிவேலன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்களை கவிஞர் திரு. து. குமரப்பன் அறிமுகப்படுத்தினார். கவிஞர்கள் அரு. நாகப்பன், சொ. சொ. மீ. சுந்தரம், மரியதாசு, சோம. சிவப்பிரகாசம், மு. மேத்தா, செல்வி மணிமேகலை, புலவர் வேலவன் ஆகியோர் கவி பாடினார்கள். கவியரங்கம் கலகலப்பாக இருந்தது.

கவிஞரின் புதல்வர்கள்

காலை, மாலை நிகழ்ச்சிகளில் கவியரசரின் புதல்வர்கள் திரு. கண்மணி சுப்பு, திரு. கலைவாணன் இருவரும் முன்னிலை வகித்தார்கள்.

மாலை விழாவில், கவியரசருடன் இருந்து பணிபுரிந்த எழுத்தாளர் திரு. இராம. கண்ணப்பன் பாராட்டப் பெற்றார். மதுரை மாநகராட்சியின் துணை மேயர் திரு. சோ. நவநீதகிருஷ்ணன் அவருக்குப் பொன்னாடை அணிவித்துப் பாராட்டிப் பேசினார்.

கவியரசரின் திருஉருவப் படத்தை நடிகை மனோரமா திறந்து வைத்து உணர்ச்சி வயப்பட்டுப் பேசினார்.

இறுதியில் விழா அமைப்பாளர்கள் திரு. எஸ்வி. இராமநாதன், திரு. கு. கருப்பசாமி, திரு. எஸ். சுந்தரராஜன், ஆகியோருக்கு திரு. மாணிக்கம் முத்தையா பொன்னாடை அணிவித்துப் பாராட்டிப்பேசினார்

இவ்விழாவில் டாக்டர் அர. சி., புலவர் சோமசிவம், புலவர் அழ. அண்ணா, மக்கள் கவிஞர் நாகப்பன் இயற்றிய 'நகரத்தார்' என்ற நூல் வெளியிடப்பட்டது. அந்நூலை திரு. தா. பாண்டியன் வெளியிட திரு. இரா. சொக்கலிங்கம் பெற்றுக்கொண்டார்.

'கன்னியரின் தோள் தொட்டபோது காணாத சுகத்தை, அண்ணாவின் கால்களைத் தொட்டபோது கண்டேன்' என்று பாடியவர் கண்ணதாசன்.

— ப. சிதம்பரம்

(கவிஞர் கண்ணதாசனின் நினைவு விழாவில்)



சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத் தலைவரான திரு. ஆர்எம். நாராயணன் அண்மையில் மதுரைக்கு வந்தபோது அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில், அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் வரவேற்றார்.



சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத்தின் அடுத்த தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் திரு. எம். எஸ்பி. சுப்பிரமணியனை திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் வரவேற்கிறார்.

கவிஞர் கண்ணதாசன் நினைவு விழாவில்...



திரு. இராம. முத்தையா



திரு. வி. என். சிதம்பரம்



தவத்திரு குன்றக்குடி அடிகளார்



திரு. ப. சிதம்பரம்




கவியரசரின் நினைவு விழாவில் அவரது திருஉருவப் படத்தை நடிகை மனோரமா திறந்து வைத்தார்.



கவிஞர் கண்ணதாசனின் நினைவு விழாவில் அமைப்பாளர்களில் ஒருவரான திரு. எஸ்வி. ராமநாதனுக்கு திரு. மாணிக்கம் முத்தையா பொன்னாடை அணிவிக்கிறார்.



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களுக்கு கோவை நகரத்தார் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் சங்கத் தலைவர் திரு. எஸ். சுப்பையா செட்டியார் பொன்னுடை அணிவித்துக் கௌரவிக்கிறார்.



கோவை நகரத்தார் சங்கத்திற்கு 9—4—82 அன்று காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் எழுந்தருளி அருளாசி வழங்கும் காட்சி.

91/1

நம்ம வீட்டுக் கல்யாணம்

நம் நகரத்தார் வீட்டுப் பெண்கள் திருமணத்திற்குப் பெருஞ் செலவுகள் செய்வது போல, அமராவதி புதூர் வயிநாகரம் நாகப்ப செட்டியார் அவர்கள், மதுரை மீனுட்சி திருக்கல்யாணத்திற்குத் தனிக் கல்யாண மண்டபமே கட்டிவைத்தார். இப்பொழுது பக்தர்கள் எண் ணிக்கை அதிகமாகி விட்டதால் பல்லாயிரக் கணக்கில் பக்தர்கள் திருக் கல்யாணத்தைக் காணவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு மதுரை அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர், 'கலைக்காவலர்' வி. என். சிதம்பரம் செட்டியாரவர்கள் 1980ஆம் ஆண்டு சமய நெறிகளுக்கு உடன்பட்டு, வடக்காடி வீதியில் திருமணத்தை நடத்தினுர்கள். தொடர்ந்து மூன்ருவதாண்டாகச் சென்ற 4-5-82 அன்று நடந்த திருமணத்தை ஏறத்தாழ ஒரு லட்சம் மக்கள் மகிழ்வோடு கண்டுகளித்தார்கள்.

திருமணம் நடத்தும் இடத்தில் கட்டப்பட்டுள்ள மண்டபத்திற்குச் சுமார் 65 ஆயிரம் ரூபாய் செலவாயிற்று. இதில் 50 ஆயிரம் ரூபாயைக் காரைக்குடியைச் சேர்ந்த திரு. கரு. கும. மீ. மீனுட்சிசுந்தரம் செட்டி யார் அவர்கள் நன்கொடையாகத் தேவஸ்தானத்திற்கு அளித்துப் பெரும் புண்ணியம் தேடிக்கொண்டார்கள். திருக்கல்யாணப் பரிவட்ட மரியாதைகளை மதுரை நகரத்தார் சங்கத் தலைவருக்கே ஆண்டுதோறும் வழங்க வேண்டும் என்று திரு. மீனுட்சி சுந்தரம் செட்டியார் அவர்கள் தேவஸ்தானத்திற்குத் தெரிவித்தது அவர்களுடைய வள்ளன்மையோடு கூடிய மதிநுட்பத்தைக் காட்டுகிறது. அதன்படி இந்த ஆண்டு மதுரை நகரத்தார் சங்கத் தலைவர் திரு. லெ. அழகுசுந்தரம் செட்டி யார் அவர்களுக்குப் பரிவட்ட மரியாதைகள் செய்யப் பெற்றன.

முதலில் திருக்கல்யாண மண்டபம் கட்டியவரும் நகரத்தார்; அதன்பிறகு பலரும் காண ஆடி வீதியில் நடத்த ஏற்பாடு செய்தவரும் நகரத்தார்; அதற்கு மண்டபம் கட்டப் பெருந்தொகை தந்தவரும் நகரத்தார். எனவே சிக்கனமாகச் சேர்த்த செல்வத்தை மீனுட்சியின் திருவடிகளில் சமர்ப்பிக்கும் பெரும் பண்பும் ஆலய நிர்வாகச் சிறப்பும் நகரத்தார்களின் மரபுக்கேற்ற திறமைகள் என்பது வெளிப்படுகிறதல் லவா! மதுரை மீனுட்சி திருக்கல்யாணம் 'நம்ம வீட்டுக் கல்யாண' மாக நடக்க அன்னை அருள் செய்கிருள். இதுவே 1878ல் சுமார் 25 லட்சம் ரூபாய் செலவழித்துத் திருப்பணி செய்த நாகப்பையாவுக்கு நாம் செய்யும் பெரிய வழிபாடாகும்.

வள்ளல் அழகப்பரின் நகைச்சுவை

அண. காளையப்பன், பாகனேரி.

'செட்டி மகன் கப்பலுக்குச் செந்தூரான் துணை' என செந்தில் முருகனைத் துணையாகக் கொண்டு கடல் கடந்து சென்று பொருள் ஈட்டிய பெருமை நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு உண்டு. நகரத்தார் பெருமக்கள், தொழில் செய்கிறபோது வருவாயில் ஒரு பகுதியை ஆதாய வரவு வைத்து அதைக்கொண்டு ஆலயங்கள், அன்ன சத்திரங்கள், கல்விச் சாலைகளை நிறுவி அறம் வளர்த்த பெருமை பெற்றவர்கள்.



"உண்மையே தாரக மென்றுணர்ந் திட்டார்,
அன்பொன்றே உறுதி யென்பார்,
உண்மையே குலதர்ம மெனக்கொண்டார்,
தொண்டொன்றே வழியாகக் கண்டார்."

என்று செட்டிநாட்டுப் பெருமக்களை வாய்மணக்க வாழ்த்தினர் மகாகவி பாரதியார்.

மகாகவி பாரதியாரால் பாராட்டப் பெற்ற பெருமையும் புகழுமிக்க நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில் தோன்றியவர்களில் கொடை வள்ளல், பார் அட் லா ராம. அழகப்ப செட்டியார் குறிப்பிடத்தக்கவர்.

பொருளை ஈட்டியபின் ஈவதே மரபு. ஆனால் ஈவதற்காகவே பொருளை ஈட்டிய பெருமை, வள்ளல் அழகப்ப செட்டியாருக்கு உண்டு. 'சமதர்ம முதலாளி' என நேருவால் புகழப் பெற்றவர் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள்.

காரைக்குடி நகரைச் சுற்றியுள்ள செம்மண் பூமியெல்லாம் கல்வி மணம் பரப்புமாறு செய்து காரைக்குடியைக் கல்விக் குடியாக மாற்றிய பெருமை செட்டியார் அவர்களையே சாரும்.

சிரிக்க வைத்ததோடு பிறருடைய சிந்தனையையும் தூண்டிவிடும் நகைத்திறத்தில் அவருடைய சொல்லாற்றலும், மதி நுட்பமும் ஊடும் பாவுமாக இலங்கக் காணலாம்.

நகைச்சுவை பொதிந்த நன்கொடை

பம்பாயில் வாழ்ந்த தென்னிந்தியர்கள் டாக்டர் அழகப்பரிடம் தென்னிந்திய கிளப் கட்டிட நிதிக்குப் பொருளுதவி கேட்பதற்காக அவருக்கு ஒரு வரவேற்பினை நல்கினார்கள். அதில் அவரை அளவுக்கு மீறிப் புகழ்ந்தார்கள். இதைப் பொறுமையுடன் கேட்ட அழகப்பர் தமக்கேயுரிய நகைச்சுவையுடன் பதில் கூறினார்.

''எனக்கு எதிர்கால வாழ்த்துரைகளில் நம்பிக்கை கிடையாது. இதுபற்றி என் சொந்த அனுபவம் ஒன்றை உங்களுக்குக் கூறுகிறேன்.

''நான் லண்டனில் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு எடை தெரிவிக்கும் இயந்திரத்தில் எடை பார்த்தேன். எனக்கு எடை பார்ப்பதில் அப்படி ஒன்றும் விருப்பமில்லை. அந்த எடைக் கார்டின் அடிப்பக்கத்தில் போட்டிருக்கும் அதிர்ஷ்டச் செய்தியை அறிந்து கொள்வதில் தான் விருப்பம். ஆகவே இயந்திரத்திலிருந்து விழுந்த கார்டை எடுத்துப் படித்தபோது 'நீங்கள் வெகுவிரைவில் கட்டழகு நிரம்பிய ஒரு வாலிபனை மணப்பீர்கள்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இனிமையான மணவாழ்த்து இதுவரை பலிக்கவே இல்லை. அதுபோல உங்கள் வாழ்த்துரைகளிலும் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை'' என அவர் கூறியதும் சபையோர் கைகொட்டி மகிழ்ந்தனர். கை தட்டல் நின்றதும், ''நீங்கள் என்னிடம் எதிர்பார்ப்பது நகைச்சுவைக் கதையை மட்டுமில்லை; ஒரு கணிசமான நன்கொடையையும் எதிர்பார்க்கிறீர்கள். அந்த நம்பிக்கையைப் பொய்யாக்க விரும்பவில்லை'' எனக்கூறி அதிகத் தொகையை நன்கொடையாக வழங்கினார்.

மருந்தில் ராகமாலிகை:-

ஒருசமயம் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் கையில் சிவப்பு கறுப்பு, நீலம் எனப் பல வர்ணங்களில் மாத்திரைகளை வைத்திருந்தார். '' இது என்ன பல வர்ண மாத்திரைகள்'' எனக் கேட்டபோது ''இது வைத்தியத்தில் ஒரு ராக மாலிகை'' எனச் சிரித்துக்கொண்டே ஒவ்வொன்றாக விழுங்கினார்.

மூடிய கண்ணுக்கு விளக்கம்:-

ஒரு நாள் கண்நோய் காரணமாக, ஒரு கண்ணைத் துணியால் மூடி இருந்தார். அப்போது அங்கு வந்த அவரது நண்பர் ''கண்ணை ஏன் இப்படி மூடியிருக்கிறீர்கள்?'' எனக் கேட்டார். அதற்கு அழகப்பர் ''இப்போது ஒரு கண்ணைக் கட்டியிருப்பதால் உலகில் நடக்கும் அநியாயத்தில் பாதிதான் எனக்குத் தெரிகிறது'' என்றார்.

அப்பர் பெருமானுக்கும் மனைவாழ்வாம்!

பழ. சண்முகம்

சைவ சித்தாந்தப் பதிப்புக் கழகம் வெளியிட்டு வரும் செந்தமிழ்ச் செல்வி இதழில் (1979 அக்டோபர் இதழ்) ''அப்பரடிகளும் சமண சமயமும், மனைவாழ்வு உண்டா'' என்ற தலைப்பில் வந்துள்ள செய்தியைப் பார்க்க வாய்ப்பு வலிந்து வந்தடைந்தது. கட்டுரையாளர் அப்பர் பெருமானுக்கு மனைவாழ்வு உண்டெனக் காட்ட முயன்றிருப்பதில் எடுத்தாண்ட,

1) ''தயாமூல தன்ம வழி எனக்கு நல்கி
மனம் திருத்தும் மழபாடி வயிரத்தூணே''

''தயாமூல தன்மம் என்னும் தத்துவத்தின் வழிநின்று
தாழ்ந்தோர்க்கெல்லாம் நலம் கொடுக்கும் நம்பியை''

என்ற திருவரிகள் முதற்பகுதியாகும்.

அவர்கள் தரும் விளக்கம் இதுவாகும்: ''தயா—அன்பு; தன்மம்—அறம். அன்பும் அன்பிற்கு முதற்காரணமாகிய அறமும், இவ்வாறு அடிகளாரால் விதந்தெடுத்துப் பேசப்பெற்றன. தத்துவம், வழி என்னும் இருசொற்களால் இந்த அன்பும் அறனுமே இனிய தத்துவ நெறியென்றும் புலப்படுத்தியுள்ளார். 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' என்ற குறட்பாவில் இவ்விரண்டுமே இல்லற வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆவன என்று திருவள்ளுவர் குறித்தமை ஓரத்தக்கது. இவ்வாறு இரங்கிய இதயங்கொண்ட அடிகளார் விருந்தோம்பிய விழுப்பம் ஒன்றே இவரது மனைவாழ்விற்குச் சான்றாகும் என்று கூறலாம்''.

இவ்விளக்கம் பற்றிச் சிறிது சிந்திக்க முற்படுவோம். மேற்குறித்த சொற்றொடர்கள் திருமழபாடித் திருத்தாண்டகத்தில்,

1) 'சினந்திருத்தும் சிறுப்பெரியர்'—என்று தொடங்கும் பாடலிலும்

2) 'குலங் கெடுத்துக்கோள் நீக்க வல்லான்' – எனத் தொடங்கும் திருநள்ளாற்றுத் திருத்தாண்டகத்திலும் காணப்பெறும் பகுதிகளாகும்.

இரக்கமே அறத்தின் அடிப்படை. 'தயாமூல தன்மம் என்றும் தத்துவத்தின் வழி நிற்பதற்கு மனைவாழ்வு இன்றியமையாதது என வள்ளுவம் கூறுவதாக இல்லை. அன்பும் அறனும் உடைத்தாயின் அதுவே இல்லற வாழ்வின் பண்பும் பயனும் ஆகும் எனக் கூறியருளினரேயன்றி மனைவாழ்வு பெருதவர்கள் அன்பும் அறனும் கொண்டொழுக முடியாதெனக் கூறியதாக எவ்வாறு கொள்ளமுடியும்? தயாமூல தன்ம வழியை ஏன் சிவபரம்பொருள் அப்பர் பெருமானுக்கு நல்கியருள வேண்டும்! தயாமூல தன்மம் என்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் வந்தடையும் நலன்கள் தாம் என்ன? வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகுவதற்குத் தானே இந்நிலை! 'வேண்டின் உண்டாகத் துறக்க' என்று பொய்யா மொழியார் ஏன் கூறினர்? துறந்தபின் பெறலரும்பெரும் பேரின்ப அனுபவத்தைப் பெற்றுய்யத்தானே, தயாமூல தன்மம் அருளப் பெறுகிறது. நல்லாற்றல் நாடி அருளாளத்தான் தயாமூல தன்மம் அருளப்பெறுகிறது. நல்லாற்றல் நாடி அருளாளத்தான் தயாமூல தன்மம் என்னும் தத்துவத்தின் வழி நின்று, தாழ்ந்தோர்க்கு நலம்வேண்டுமென்று அருளப்பெருகிறதே அன்றி மனைவாழ்வு வேண்டுமெனக் கூறினர்களில்லையே.

மேலும் கட்டுரையாசிரியர், தாம் கொண்ட கருத்துக்கு ஆதரவாக அப்பர் பெருமான் அருளிய ''உயர்ந்தேன் மனைவாழ்க்கையும் ஒண் பொருளும்'' -1), வலித்தேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன் -2) என்ற தேவாரத் தலைப்புகளை எடுத்துக்காட்டி ''அடிகள் தம்முடைய முதற் பதிகத்திலேயே தம்முடைய மனைவாழ்க்கையை சுட்டுதல் காணத்தகும்'' எனச் சொல்லுவர்.

அப்பர் பெருமான் கூறியருளிய இப்போதைய நிலைக்கும், இதற்கு முன் பேசியருளிய நிலைகளுக்கும் உள்ள இடைவெளி மலைக்கும் மடுவுக்கும் உள்ள நெடுந்தூரமாகும். முன்னைய பேர்க்கெல்லாம் பசுகரண செயலின்பாற்பட்டது. இப்போதைய நிலை பதிகரணச் செயலாகும். திலகவதி அம்மையாம் தமக்கையாரால் அளிக்கப்பெற்ற திருவாளன் திருநீறு அடிகளுக்கு ஒளிக்கவசமாகும். முன் உள்ள நிலை கொல்லாமை மறைந்துறையும் சமணசமய மருள்நிலைக் கவசமே. இப்போதைய 'சிவநிலை' பேசற்கரியது. சிந்திப்பரியன! பெருமானின் உடலினுள் ளிருந் தியக்குபவன் அனைத்துலக நாயகனும் திருவதிகை வீரட்டானீசுரன். மருள் நீக்கியாரை அப்படியே விழுங்கிக்கொண்டு மீண்டும் புதுப் பித்துத் தந்தருளிய புத்தொளி நிலை (தந்ததுன் தன்னைக்கொண்ட தென் தன்னை சங்கரா யார்கொலோ சதுரா என்ற மணிமொழியின் வண்ணம் நிலைமாற்றமே) விரிவஞ்சி இத்துடன் அமைதி செய்து, மேற் கொண்ட நிலையைத் தொடருவோமாக!

கற்றோர் தமக்குத் தாம் வரம்பாகிய, கல்லா அறிவாம் அகந் தூற்றில் சுரக்கும் சொந்தப் படிப்பு (இறையருளால்) திருவாய் மலரும் பெற்றி இந்நிலை. புறமிருந்து கற்ற தெவ்வளவு மிகையானாலும் அந்த அனுத்துணை ஆற்றல் கொண்டு ஆய்வதில் சற்று வணங்கித் தாழ்ந்தே போதல் சிறப்புடைத்து. அப்பர் பெருமான் கூற்று முன்னைய பிறவித் தொடர்பு என்று நாம் கொள்ளக்கூடாதா? இறைவன் திருநோக்கு முழு நிலையாக ஆளும் நிலை இப்போது. முன்போந்தது, தற்போ திருப்பது, இனி வருவது, ஏனைய மக்களுக்குரிய விழுப்பமான உய்யும் நெறி அனைத்தும் ஒருங்கே பெருக்கெடுத்துச் சுழலும் கடல் மடை. கானுறு வானதியாகும்! இவைகளுக்குப் பொருள் காண இறையருள் துணை நிற்றல் இன்றியமையாதது. பலகோடி முறை இன்றியமை யாததே! அருளாளர்கள் திருவாய் மலர்வை அப்படியே சொல்லுக்குப் பொருள் காணல் முறையாகாது. சொற்பொருள் பாராது இச்சொற்கள் வர உரித்தான அடிப்படைப் பொருள் யாது? அந்த அடிப்படைக்குக் காரணம் யாது. காரியம் யாது? காரண காரியம் யாது என்றெல்லாம் உற்று நோக்கவேண்டும். அப்பாலும் இறையருள் இதை வெளியிட ஊக்கவேண்டும். அதுவரை நாம் காணும் பொருளை அரைப்புள்ளி யுடனே (கமா) வைத்துக்கொண்டே வந்து உள் ஒளி மின்னிய பிறகு முற்றுப்புள்ளி (புல் ஸ்டாப்) வைத்து வெளியிடல் முறையாகும். இவ்வாறு அணுகுதலே மரபு என்று அத்துறை நிற்போர் கருதுகிறார்கள்.

(தொடரும்)


பாராட்டும் அறிமுகமும்

டாக்டர் அர. சிங்கார வடிவேலன்

கவியரங்க மேடைகளில் இன்று தலைமை ஏற்கத்தக்க தகுதி படைத்தவர்களில் டாக்டர் அர. சிங்கார வடிவேலன் சிறப்பான இடத்தைப் பெறுகிருர் என்பது நமக்குப் பெருமை.

45 வயது இளைஞரான இவர் கண்டனூரைச் சேர்ந்தவர். எம்.ஏ., பி. டி., படித்துள்ள திரு. சிங்கார வடிவேலன் 1961 முதல் 1964 வரை காரைக்குடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் 1964 முதல் 1972 வரை காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியிருக்கிருர். தற்சமயம் தேவகோட்டை சேவுகன் அண்ணமலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகக் கல்விப் பணியாற்றிவருகிருர்.

வழிகாட்டி



திரு. சிங்கார வடிவேலன் 'சங்க இலக்கிய உவமைகள்' என்ற ஆய்வு நூலை எழுதி 'டாக்டர்' பட்டம் பெற்றிருக்கிருர். இப்பட்டம் 1978ல் மதுரைப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்டது. காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரியில் முதுகலைத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த டாக்டர் ஆர். சாரங்கபாணி அவர்கள்தான் தன் ஆராய்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்தார்கள் எனப் பெருமிதத்தோடு கூறுகிருர் இவர்.

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

தான் டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் மாணவன் என்றும் அவர் நடத்திய சங்க இலக்கிய, தொல்காப்பிய வகுப்புக்களும் பண்டிதமணியின் 'உரைநடைக் கோவை' நூலில் உள்ள 'குறுந்தொகை'க் கட்டுரையும் தான் தன்னை ஆராய்ச்சி நூல் எழுதத்தூண்டினவென்றும் கூறுகிருர்.

ஆய்வு

பத்துப் பாட்டு, எட்டுத் தொகை போன்ற சங்க இலக்கியங்களில் உள்ள 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உவமைகளில் இந்த ஆராய்ச்சியாளர் வரலாற்று உவமை, இயற்கை உவமை, மரபு உவமை, தொழில் உவமை என்று இவற்றை வகைப்படுத்திப் பிரித்திருக்கிருர். தொல்

காப்பிய உவமைக்குள் எல்லா வகை அணிகளும் அடங்கும் என்பதை இவர் காட்டியிருக்கிறார். தண்டியலங்காரம் என்பது தனித் தமிழ் நூலே என்று உறுதிப்படுத்தியிருக்கிறார்.

எழுத்தாளர்

திரு. சிங்கார வடிவேலன் பல நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் அபிராமி அந்தாதி (மூலமும் உரையும்), முருகன் (கவிதை), மீனாட்சி (கவிதை) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவரது கட்டுரைகள் சிந்தனையைத் தூண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் கல்விக் குழு உறுப்பினராக இருக்கும் இவர் 1980ல் புதுடில்லியில் நடைபெற்ற தேசிய கவி சம்மேளனத்தில் தமிழ் நாட்டின் (தமிழ் மொழி) சார்பாகக் கலந்து கொண்டிருக்கிறார். பாலர் கவியரங்கம் நடத்தி வரும் இவர் 500க்கும் மேற்பட்ட கவியரங்குகளில் கலந்து கொண்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

பழனிக்கு வழிநடையாக நடந்து போகும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு இவருடைய வழிநடைப் பாடல்கள் பெருந்துணையாக இருக்கின்றன.

'காளைத் தவிசேறும் கண்ணுதலான் கண்மணியே
பாளைச் சிரிப்பழகா! பழனிமலை ஆண்டவனே!
ஆளை அளக்காமல் அன்பை அளந்துடனே
வாளை புரள்வயலா! வருவாய் இதுசமயம்'

என்ற இவருடைய பாடலைக் கேட்டால் முருகன் பறந்து வரமாட்டானோ?

சூர்ப்பனகை பற்றி மண்டோதரி பாடுவதாக இவர் பாடிய வரிகள், கம்பனுக்கும் எட்டாத கற்பனையின் அற்புதங்கள்.

'மூக்கறுந்த நாத்தியந்த மூதேவி சூர்ப்பநகை
நாக்கறுந்து போயிருந்தால் நற்றாலி பிழைத்திருக்கும்'

என்ற அடிகள் கண்ணதாசனுக்குப் பிறகும் நகரத்தார்களில் கவியூற்று வற்றவில்லை என்பதைக் காட்டுவன.

சிறந்த கொள்கை வீரராகவும், சமுதாய முன்னேற்றத்தில் துடிப்புடையவராகவும் திகழும் சிங்கார வடிவேலன் அவர்கள் அண்மையில் மலேசியா சென்றிருக்கிறார்கள். அவர் பெருமை உலகெங்கும் பரவ வாழ்த்துகிறோம்.

— எல். சுந்தரம்

நகரத்தார் இளைஞர் சங்கம்
நாளெலாம் உயர்ந்து வாழ்க!

சேலம் நகரத்தார் இளைஞர் சங்கம் 9-8-1981 அன்று சேலத்தில் வசிக்கும் இளைஞர்களால் தொடங்கப்பட்டது. வெவ்வேறு தொழில்களிலும் வேலைகளிலும் இருப்பவர்கள் இதில் அங்கத்தினர்களாக உள்ளனர்.

இச்சங்கத்தின் குறிக்கோள்கள் :

இளைஞர்கள், பெண்களிடையே ஒழுக்கம், தோழமை மனப்பான்மை, ஒற்றுமையுணர்ச்சியை உண்டாக்குதல்.

இளைஞர்கள், பெண்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்புப் பெறுவதற்கும், திருமணங்கள் முதலியவைகள் நடைபெறுவதற்கும் பாடுபடுதல்.

எளிய மாணவ, மாணவியர்கட்கு அவர்கள் கல்வி மதிப்பு அடிப்படையில் உதவுதல்.

எளியவர்கட்கு மருத்துவ வசதி செய்து கொடுத்தல்.

ஆதரவற்ற பெண்கட்கு சிறு தொழில்கள் செய்ய குடிசைத் தொழில்கள் நடத்த ஏற்பாடு செய்தல்.

இளைஞர்கள், பெண்கட்கு தொடர்புடைய சட்டங்களை அரசாங்கம் இயற்றவோ, மாற்றவோ முற்படும்போது அவைகளை ஆராய்ந்து சங்கத்தின் கருத்தை மத்திய, மாநில அரசுகளுக்கு எடுத்துக் கூறல்.

வாணிபம், கைத்தொழில் சங்கங்களுடனும் மற்றும் இதர சங்கங்களுடனும் தொடர்பு கொண்டு அனைவர்க்கும் நன்மை பயக்கும் முயற்சிகளில் ஈடுபடுதல்,

குறைந்த வருமானமுடையவர்களுக்கு விடுதி கட்டி குறைந்த வாடகையில் அறைகளை ஒதுக்குதல்.

இளைஞர்கள், பெண்களுக்கு வேண்டிய புள்ளிவிவரங்கள் மற்றும் அவர்கள் வளர்ச்சி முதலியவைகள் ஏற்படுத்துதல்.

சங்க அங்கத்தினர்களுக்கு உல்லாசப் பயணங்கள், பொழுது போக்குப் பயணங்கள் நடத்துதல்.

நகரத்தார் உயர்விற்காக நாளெலாம் உழைக்கும் சங்கம் புகழுடன் தொண்டு செய்து புவியினில் பொலிந்து வாழ்க!



எங்கள் சங்கம்

கோவை நகரத்தார் சங்கம்

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் 'தமிழ்ப் பல்கலைச் செம்மல்' பட்டம் பெற்ற குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களுக்கு கோவை நகரத்தார் சங்கம் 18-4-82 அன்று ஒரு பாராட்டு விழா நடத்தியது. கோவை பாரதியார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஆர். சுப்பையன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார்கள். சங்கத் தலைவர் திரு. எஸ். சுப்பையா செட்டியார் அனைவரையும் வரவேற்றார். திரு. 'தீபம்' நா. பார்த்தசாரதி, கோவை வானொலி நிலைய இயக்குநர் திரு. ஜி.செல்வம், மதுரை பாத்திமாக் கல்லூரிப் பேராசிரியை சி.எஸ். விசாலாட்சி, இராமகிருஷ்ண மருத்துவ மனைச் செயலர் திரு. இ. வெங்கடேசலு, திருவாளர்கள் எல். சோமு, 'கலைமகள்' இராம. இராமநாதன், கவிஞர் செல்ல கணபதி, டி. ஆர். ராதாகிருஷ்ணன், வி. பழனியப்பன் ஆகியோர் திரு. அழ. வள்ளியப்பாவைப் பாராட்டிப் பேசினார்கள். சங்க நிர்வாகச் செயலாளர் திரு. ஏ. நடராஜன் நன்றி கூறினார்.

திருநெல்வேலி நகரத்தார் சங்கம்

திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 21-3-82 அன்று நடைபெற்றது. அப்போது புதிய ஆண்டுக்கு திரு. சே. கனகசபை தலைவராகவும், திரு. எஸ். சொக்கலிங்கம் துணைத் தலைவராகவும் திரு. கை. திருநாவுக்கரசு செயலாளராகவும் திரு. வி. இராமகிருஷ்ணன் துணைச் செயலாளராகவும் திரு. பழ. முருகப்பன் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

ஹைதராபாத், செகந்தராபாத் சங்கத்தின் உல்லாசப் பயணம்

ஹைதராபாத், செகந்தராபாத் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 28-3-82 அன்று உல்லாசப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டி, கேள்வி - பதில் நிகழ்ச்சிகள், பெரியவர்கள், பெண்களுக்கு வேடிக்கைப் போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

விருத்தாசலம் நகரத்தார் சங்கம்

விருத்தாசலம் நகரத்தார் சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா தேவாரப் பாடசாலையில் 11-4-82 அன்று நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு. எல். மாணிக்கம் செட்டியார் தலைமையேற்க, திரு. இராமசாமி வரவேற்புக் கவிதை வாசித்தளிக்க, திரு. சோம. மீனாட்சிசுந்தரம் ஆண்டறிக்கை வாசித்தார். சிறுவர் சிறுமியர் நடன

நிகழ்ச்சியைத் தொடர்ந்து சிறுவர்கள் 'வயிநாகரமும் மதுரைக் கோபுரமும்' என்ற தலைப்பில் நாடகம் நிகழ்த்தினார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் திரு. ச. மெய்யப்பன், திரு. சோம. இளவரவு ஆகியோர், முறையே 'தமிழ்க் கடல் ராய. சொ.' 'கவியரசு கண்ணதாசன்' என்ற தலைப்புகளில் விரிவுரையாற்றினார்கள். திரு. கே. எம். என். மாணிக்கம் செட்டியார் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

புதிய நிர்வாகிகள்

புதிய ஆண்டுக்கு திரு. ஆர். எம். செல்லப்ப செட்டியார் தலைவராகவும், திரு. என். எல். பூமிநாதன் செட்டியார், கனகசபை செட்டியார் துணைத் தலைவர்களாகவும், திரு. மது. சிங்காரம் செட்டியார் செயலாளராகவும் திரு. ராம. சோமசுந்தரம் செட்டியார் திரு. எஸ். வள்ளியப்ப செட்டியார் உதவிச் செயலாளர்களாகவும், திரு. சோம. மீனாட்சி சுந்தரம் செட்டியார் பொருளாளராகவும் மற்றும் ஏழு பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய ஐந்தொகை

வள்ளுவப்பித்தன்

அறமும் தர்மமும் பிறவியின் சொந்தம்!
உழைப்பும் உறுதியும் உயர்வின் துணையாம்!
நமக்கு —
பழம் பெருமையும் உண்டு; பகுத்து உணரும்
ஆற்றலும் உண்டு!

ஆயினும், ஆயினும் —
குலப் பெருமை மட்டும் பேசுவதால் கூடிடுமோ
இன்று உயர்வு!

புதியதோர் விதி செய்வோம் — இந்தப்
புதிய ஐந்தொகையை நாம் படைப்போம்!

வரவு

காலத்தால் கற்ற கல்வி
காலம் முழுதும் துணை இருக்கும்!
பழைய பல்லவிதான் —
ஆனால் என்றும் உயிருள்ள பழமொழி!
பெண் கல்வி பெருகி விட்டால்
வெட்டிப் பேச்சில்லை; வீணான வாழ்வில்லை!
உயர்கல்வி இல்லாத ஆண் - பெண்
ஒருவரும் இல்லாத சமுதாயம் என்ற நிலை
கொண்டு வருவோம் நம் **வரவாக!**

பற்று

தாயைக் கொல்லாத தொழில்
ஆளையே தின்று விட்டது!
பொருளை ஆதாரமாகக் கொண்ட தொழில்
போனகதை நம்மவர்க்குப் புத்திமதி!
பல்வேறு தொழில்களில் **பற்று** வைப்போம்!
நம்மினத்தார் தலைமை ஏற்கும் நிறுவனத்தில்
நம்மவர்க்கே வேலைவாய்ப்பு நாம் தருவோம்!!

இருப்பு

வாழ்ந்தால் பொறுக்காத சாதிஎன்னும்
வசைமொழி இல்லாமல் வாழ வேண்டும்!
பண்பட்ட நெஞ்சங்கள்; அவைதான்

பண்பாட்டின் அங்கங்கள் !
பண்பாட்டை இருப்பு வைப்போம் ;
பரம்பரையாய்த் தொடர வைப்போம்!

ஆதாயம்

வள்ளல்கள் என்ற பெயர் வேண்டாம் !
வாழவைப்பவர்கள் என்றபெயர் போதும் !
எள்ளல் இல்லை; துள்ளலும் இல்லை!
நல்லவர்கள் — அதேசமயம்
வல்லவர்கள் — என்ற பெயர்
வளர வைப்போம்! ஆதாய வரவாக
எழுதி வைப்போம் !

செலவு

முறை கெட்ட "முறைகள்" —
"தோது பார்க்கும்" துயரங்கள் —
இளம் மொட்டுக்களுக்கு அவை எரிநெருப்பு !
சமுதாயப் பயிருக்கு அவை சுடும்நீர் !!
செலவு எழுதுங்கள் அவைகளை !
செல்லட்டும் பயணம் ... !!

"மந்திரமும் தந்திரமும் மருந்து"மான மகேசன்-

வைத்தீஸ்வரன் கோயில்

'நாகப்பா' மணி, சிறுகூடல்பட்டி.

இன்றைய நவநாகரிக உலகில் நோய்கள் பலப்பல. அந்நோய்களைத் தீர்க்கும் மருந்துகளும் பலப்பல. மருத்துவ விஞ்ஞானம் மிகமிக முன்னேற்றமடைந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. எனினும் சில சமயங்களில் மருத்துவர்களாலும் தீர்த்துவைக்க முடியாமல் கைவிடப்படும் தீராத நோய்களையும் தீர்த்தருளும் பொருட்டு 'ஸ்ரீ வைத்திய நாதர்' என்ற பெயருடன் இறைவன் எழுந்தருளியிருக்கும் ஸ்தலமே சோழவளநாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில், சீர்காழித் தாலுகாவில் உள்ள வைத்தீஸ்வரன் கோயிலாகும்.

ஸ்தல மகிமை

நவக்கிரகங்களுள் செவ்வாய் (அங்காரகன்) மக்களுக்குத் தேகத்தில் வெப்பத்தை உண்டாக்கிப் பிணி அழிக்கும் ரோககாரகன் ஆவான். மேலும் செவ்வாய் தோஷத்தால் பல பெண்களின் திருமணத்தில் தடை ஏற்படுத்திச் சிரமப்படுத்துவான். வியாதிகாரகனாகிய அவனுக்கே ஒரு முறை குஷ்டநோய் வந்து அது தீர, அவனே வைத்தீஸ்வரரை வழிபட்டுப் பிணி நீங்கி, இத்தலத்திற்கு மேலும் பெருமை சேர்த்தான். எனவே இது 'அங்காரக க்ஷேத்திரம்' என்று அழைக்கப்படுவதால், இவ்வங்காரக க்ஷேத்திரத்திற்கு வந்து வழிபடுபவர்களுக்குச் செவ்வாய் தோஷம் நீங்கும்.

''புள்'' எனும் வாய்மை மிகும் ஜடாயுக்கு இராமபிரான் மோட்சம் கொடுத்த இடமாதலால் இத்தலத்தைப் 'புள்ளிருக்கு வேளூர்' என்றும், 'தையல்நாயகி கோயில்' என்றும் 'வினைதீர்த்தான் கோயில்' என்றும் அழைக்கிறார்கள்.

இத்தலத்தின் முக்கிய பெருமை என்னவென்றால் திருச்செந்தூர், பழநி, திருத்தணி, சுவாமிமலையில் முருகனும், மதுரையில் மீனாட்சியும், காஞ்சியில் காமாட்சியும், தில்லையில் நடராஜரும், தனித்துப் பிரதான மூர்த்தியாக விளங்குவது போல் அல்லாது இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் வைத்தியநாதரும், தையல்நாயகியும், செல்வ முத்துக்குமார சாமியும், ஒருசேரப் பிரதான மூர்த்திகளாகக் கீர்த்தியுடன் விளங்குகிறார்கள்.

செவ்வாயின் அதிதேவதையான முருகப்பெருமான் முத்தையாவாக — செல்வ முத்துக்குமாரசாமியாக இத்தலத்தில் எழுந்தருளி, ஒவ்வொரு மாதமும் கார்த்திகைத் திருநாளில், அம்மையப்பரிடம் விடைபெற்று, அபிஷேக மண்டபத்தில் எழுந்தருளி, பால், பன்னீர், பஞ்சாமிர்தம், இளநீர், விபூதி, சந்தனம். சந்தனக் கலவை என மணம் கமழும் அபிஷேகம் கொண்டு ஆயிரமாயிரம் மக்களுக்கு அருள்பாலித்து மெய் சிலிர்க்க வைக்கும் காட்சி பார்ப்பவர்களுக்கு வெள்ளித்திரையில் வண்ணப் படச் சுருள்களைப் பார்ப்பது போல் இருக்கும்,

மேலும், மக்கள் வாழ்வில் பல வக்கிரங்களை உண்டாக்கும் நவக்கிரகங்களின் வக்கிர அமைப்பையே மாற்றி, பிற தலங்களில் அவை இறைவனுக்கு முன் இருப்பதுபோல் அல்லாமல் இத்தலத்தில் தன் சந்நிதிக்குப் பின்னால், செல்வமுத்துக்குமாரசாமி சந்நிதிக்கு முன்னால், கூப்பிய கரங்களுடன் நேர்கோட்டில் நிற்க வைத்துவிட்டார் வைத்திய நாத சுவாமி. இங்கு நவக்கிரகங்கள் செயலற்று நிற்பதால் இத்தலத்திற்கு ''கோளிலி தலம்'' என்ற ஒரு சிறப்புப் பெயரும் உண்டு.

தீராத நோய்களும் இங்குக் கொடுக்கப்படும் திருச்சாந்துருண்டை மகிமையாலும், சந்தனக் குழம்பின் மகிமையாலும், ஜடாயு குண்டத் திருச்சாம்பல் மகிமையாலும் குணமடையும். குஷ்டம், வெண்குஷ்டம் போன்ற தீராத தோல் நோயுடையவர்கள் நாற்பத்தைந்து நாட்கள் (ஒரு மண்டலம்) தொடர்ந்து இங்குள்ள சித்தாமிர்த தீர்த்தக்குளத்தில் ஸ்நானம் செய்து வந்தால் குணமடையும். இத் திருக்குளத்தில் சதானந்த முனிவரின் சாபத்தால் தவளையும், பாம்பும், விஷ ஜந்துக்களும் உயிர் வாழ்வதில்லை.

இது, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், காளமேகப்புலவர், படிக்காசுத் தம்பிரான், குமரகுருபரர், இராமலிங்க அடிகளார், அருணகிரிநாதர் போன்ற சான்றோர்கள் வழிபட்டுப் பாடல்கள் இயற்றிப் போற்றிய ஸ்தலமாகும்.

முருகன் சூரபத்மனை வெல்வதற்குச் சக்தியிடம் வேல் வாங்கியது இத்தலத்தில்தான். வேம்பு இத்தலத்தின் ஸ்தல விருட்சமாக உள்ளது.

தில்லையில் திருமூலரும், பழநியில் போகரும் (சித்தர்கள்) அடங்கியது போல இத்தலத்தில் வைத்திய சாஸ்திரத்திற்கே ஆதிநாயகரான ''தன்வந்திரி'' என்னும் சித்தர் அடங்கியிருப்பதால் தீராத நோயும் இத்தலத்திற்கு வந்தால் தீர்ந்துவிடும் என்பதில் ஐயமுண்டோ?

பயணம் வரலாறு

கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாகக் கீழச்சிவல்பட்டி, பி. அழகாபுரி நகரப் பெருமக்களை முதன்மையாகக் கொண்டு, சிறுகூடல்பட்டி, குருவிக்கொண்டான்பட்டி, ஆவினிப்பட்டி, ராங்கியம், மிதிலைப்பட்டி,

கோனுபட்டு, அத்தங்குடி, கடியாபட்டி, ராயவரம், அரிமழம், கானுடு காத்தான், பள்ளத்தூர், கோட்டையூர் போன்ற பல செட்டிநாட்டு ஊர்களிலிருந்தும் நகரத்தார் பெருமக்கள் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வழிநடைப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

பிரயாண வசதிகள் அதிகரித்திருக்கும் இந்நாளிலும் ஏராளமான பக்தர்கள் மாட்டு வண்டி கட்டிக்கொண்டு, பாதயாத்திரையாகவே சென்று வருகிருர்கள். ஒவ்வொரு ஆண்டும் அதிகமான அளவில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் சாரை சாரையாக ஐந்து, ஆறு நாட்கள் நடந்து செல்வதைப் பார்க்கும் போது, இறைவன்பால் அவர்களுக்குள்ள ஆழ்ந்த பக்தி புலப்படுகிறது. மன்னர்க்குப் பின் இறைப்பணியும் அறப்பணியும் செய்து, ஏற்றமுடன் வாழ்ந்த பெருமக்களல்லவா நகரத்தார் !

பயண விபரம்

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் கீரணிப்பட்டி அம்மன் கோயில் திருவிழா முடிந்த முதல் வியாழக்கிழமையன்று அதிகாலை ஒரு மணிக்கு, உண்டியல் பானை மாட்டு வண்டியுடன் மற்ற மாட்டு வண்டிகளும், பாதயாத்திரை செல்பவர்களும் புறப்படுவார்கள்.

பள்ளிவாசல், திருமயம், நமனசமுத்திரம் வழியாகப் புதுக்கோட்டை சென்று பகலில் தங்குவார்கள், பிறகு மாலையில் மச்சுவாடிக்குச் சென்று எல்லா ஊர் நகரத்தார்களும் ஒன்று சேர்ந்து, முன்னோர்களால் ஏற்படுத்தப்பெற்ற நேரமாகிய கோட்டையில் மணி அடிக்கும் இரவு எட்டு மணிக்கு, வந்திருக்கும் மொத்த வண்டிகள் எத்தனை, பாதயாத்திரை செல்பவர்கள் ஆண், பெண், குழந்தைகள் எத்தனை என்ற எண்ணிக்கை எடுத்துப் புறப்பட்டு, இச்சடி, பெருங்களூர், ஆதனக்கோட்டை வழியாக வெள்ளிக்கிழமை காலையில் கந்தர்வகோட்டை சென்று பகலில் தங்குவார்கள். அங்கு வண்டிகளுக்கு நம்பர் போடப்படும். வண்டிகளும் ஒவ்வொரு நாளும் மாலையில் புறப்படுவதிலிருந்து மறு நாள் காலை ஆறு மணி வரை விலகாது ஒன்றன்பின் ஒன்ருகச் சாரி சாரியாக ஊர்ந்து செல்லுவது பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

கந்தர்வகோட்டையிலிருந்து வெள்ளிக்கிழமை மாலையில் புறப்பட்டுத் திருக்கானூர்ப்பட்டி, வஸ்தாச்சாவடி, தஞ்சாவூர், மாரியம்மன் கோயில் வழியாகச் சனிக்கிழமை காலை பூண்டியை அடைந்து அங்கு பகலில் தங்குவார்கள்.

பிறகு பூண்டியிலிருந்து சனிக்கிழமை மாலையில் புறப்பட்டுச் சாலியமங்கலம், களஞ்சேரி, இரும்புதலை, திருக்கருகாவூர், மட்டியாந்திடல், பாபநாசம், சுந்தரப்பெருமாள் கோயில் வழியாக ஞாயிற்றுக்கிழமை காலையில் வெள்ளைப்பிள்ளையார் கோயில் என்ற திருவலஞ்சுழியை அடைந்து அங்கு பகலில் தங்குவார்கள்.

பிறகு திருவலஞ்சுழியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை மாலையில் புறப் பட்டுக் கும்பகோணம், திருநாகேஸ்வரம், திருவிடமருதூர், ஆடுதுறை நரசிங்கம்பேட்டை, குற்ருலம் வழியாகத் திங்கட்கிழமை காலை மூவலூ ரை அடைந்து அங்கு பகலில் தங்குவார்கள்.

பிறகு மூவலூரில் இருந்து திங்கட்கிழமை மாலையில் புறப்பட்டு, மாயவரம் வந்து, அங்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்களைப் பார்க்க வந்த உறவினர்களுடன் சேர்ந்து, இரவு சுமார் பத்து மணியளவில் பிரயாணத்தைத் தொடர்ந்து, திருநின்றியூர், கதிராமங்கலம் வழி யாகச் சென்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ஐந்து மணிக்கு வைத்தீஸ்வரன் கோயிலை அடைந்து, பாத யாத்ரீகர்கள் எல்லோரும் வந்து சேர்ந்துவிட்டார்களா என்று சரிபார்த்து, எல்லோரும் ஒன்று சேர ''ஆண்டானை யடியேனை யாளாக் கொண்டு .... '' என்ற ஆரும் திருமுறை திருத்தாண்டகப் பாடலைப் பக்திப் பரவசத்தோடு பாடிக் கொண்டு, பெரிய பிரகாரம் வலம் வந்து, சுவாமி தரிசனம் செய்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இந்தப் பாதயாத்திரை செய்யும் ஐந்து நாட்களிலும் பகலில்தங்கி, மாலையில் பயணம் தொடங்குவதற்கு முன்பு கீழச்சிவல்பட்டி, பி.அழகா புரி நகரத்தார்களில் பெரியவர் ஒருவரிடம் விபூதியை வாங்கி அணிந்து கொண்ட பின்னர்தான் ஒவ்வொருநாளும் பயணத்தைத் தொடங்க வேண்டும். வழியில் உள்ள ஸ்தலங்களை வெளியிலிருந்து வணங்குவது தவிர உள்ளே சென்று வணங்குவது இல்லை.

புதன்கிழமை வியாழக்கிழமைகளில் அபிஷேக ஆராதனைகள் செய்து, வெள்ளியன்று மதியம் நகரவிடுதியில் வேல் பூசையிட்டு, விபூதி பிரசாதம் பெற்றுக்கொண்டு, வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து புறப்படுவார்கள்.

சனிக்கிழமை ஆறுபடை வீடுகளில் ஒன்ருகிய சுவாமி மலையில் சுவாமிநாத சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து தங்க ரதம் இழுப்பார்கள்.

மறு புதன்கிழமை காலையில் வண்டிகள் அனைத்தும் பள்ளிவாச லுக்கு வந்து, உணவருந்தி, சுமார் பத்துமணியளவில் பக்கத்திலுள்ள ஆவிக்கரைக்கு வந்து சேர்ந்ததும், அவ்விடம் எல்லோரும் கூடி விபூதி பிரசாதம் பெற்றுப் பயணம் பூர்த்தியடையும். எல்லோரும் அவரவர் ஊர் செல்வர்.

இவ்வழி நடைப் பயணம் செல்பவர்கள் முப்பது நாட்கள் விரத மாக இருந்து, பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்து உடலையும் உள்ளத் தையும் சுத்தமாக வைத்து, ஆண்டவனை வழிபட்டுத் தொடங்கினுல் பயணம் வெற்றியாக முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நகரத்தார் திருப்பணி

இத்திருத்தலத்தில் நகரத்தார் பெருமக்களால் கர வருஷம் ஆனி மாதம் 14ம் நாள், கோபுரங்கள் உள்பட புதுப்பித்துத் திருப்பணி செய்து, தீர்த்தவாரி மண்டபமும், அம்மன் சந்நிதி மண்டபமும் நூதன மாகக் கட்டி முடித்து மகா கும்பாபிஷேகம் நிறைவேறியதற்குச் சான்று, தீர்த்தவாரி மண்டபத்திற்கும் தெப்பக்குளத்திற்கும் வலது புறம் உள்ள நடைபாதையில், தலைக்குமேலே இருக்கும் கல்வெட்டு மூலம் தெரியவருகிறது. ஸ்ரீசெல்வமுத்துக்குமாரசாமிக்கு அப்பொழுதே நகரத்தார்களால் வெள்ளி ரதமும் செய்து வைக்கப்பெற்றிருக்கிறது. ஆண்டவனுக்கு அர்ச்சிப்பதற்காகத் தாராளமாகப் பூ கிடைக்கும் வகையில் அந்த நாளிலேயே நகரத்தார்கள் நந்தவனம் வைத்துப் பூ வழங்கியிருக்கிறார்கள். இன்றும் அபிஷேகத்திற்கு நகர விடுதியி லிருந்து பால் கொண்டு செல்லப்படுகிறது.

வைத்தீஸ்வரர் சந்நிதியில் கோபுர உச்சியில் கடந்த எட்டு ஆண்டு களாகப் பழுதடைந்திருந்த மெர்குரி விளக்கையும் வேல் வடிவ விளக் கையும் உள்ளூர்ப் பிரமுகர்கள் வேண்டுகோளுக்கிணங்க இந்த ஆண்டு பாதயாத்திரை வந்த நகரத்தார் பெருமக்கள் இரண்டே நாட்களில் சுமார் ரூபாய் 2250/- சேர்த்து உடனடியாக அந்த விளக்குகளை ஒளி யூட்டி அழகுபெறச் செய்திருக்கிறார்கள்.



பனையப்பட்டி
சி. மு. மு. அருணாசலம்
செட்டியார் அவர்கள்
மனைவி

அரு. அலமேலு ஆச்சி

நினைவு அஞ்சலி

தோற்றம் : 11-2-23 ▪ மறைவு : 30-3-82

குன்றாத பக்தியினால் இறைவனடி சேர்ந்திடவே
இன்னுயிர் தனைநீத்து விண்ணுலகு சென்றனையோ !
அன்புக்கினிய மக்கள் அனைவரையும் வாழ்விக்க
தூண்டா மணிவிளக்கு சுடரில் கலந்தனையோ !

வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மை எந்தக் காலத்திலும் கவியரசரிடம் இருந்ததில்லே. எந்தக் கட்சியில் அவர் இருக்கிருரோ, அந்தக் கட்சிக்கு விசுவாசமாக இருப்பார். அவருக்கு இரட்டை வேடம் போடத் தெரியாது.

— **எஸ். முத்து** எம். எல். சி.
(கவிஞர் கண்ணதாசனின் நினைவு விழாவில்

மணி விழா

கானடுகாத்தான் லெ. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கும் அவரது துணைவியார் தெய்வானை ஆச்சி அவர்களுக்கும் 20-4-82 செவ்வாயன்று திருக்கடையூர் அபிராமி நாயகி சமேத அமிர்தசரேஸ்வரர் சன்னதியில் 60ஆம் ஆண்டு மண விழா சிறப்பாக நடந்தேறியது.

ஒக்கூர் வீர. ராம. சித. ராம. வள்ளியப்ப செட்டியார் அவர்களுக்கும் அவரது மனைவி கண்ணுத்தாள் ஆச்சி அவர்களுக்கும் 8-5-82 அன்று ஒக்கூரில் சிவாக மோக்த சஷ்டியப்த பூர்த்தி சாந்திக் கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது. தேவகோட்டை 'பாலகவி' வே. இராமநாதன் செட்டியார் அவர்களும் ஒக்கூர் நா. சாத்தப்ப செட்டியார் அவர்களும் முன்னின்று இதை நடத்தி வைத்தார்கள்.

'வருமான வரி கட்டுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் முற்படுத்தப்பட்டவர்கள் ; வருமான வரி கட்டாதவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள்' என்று இருக்கலாம் எ பது என் யோசனே.

— **எஸ். முத்து** எம். எல். சி.
(கவிஞர் கண்ணதாசனின் நினைவு விழாவில்

மதுரை-625009, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு, டோர் நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர் நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.